**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF, SHENCOTTAH**

O.S.No.15/2023

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | சுப்பிரமணியன் கரையாளர் |
| Father's Name | : | கந்தசாமி கரையாளர் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 75 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 11.03.2026.

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. வாதி கடந்த 29.09.2022 ம் தேதி 2 ம் பிரதிவாதி அலுவலகத்தில் வாரிசு சான்றிதழ் பெற கணினி மையம் மூலம் விண்ணப்பம் கொடுக்கப்பட்டு 03.10.2022 ம் தேதியில் 2 ம் பிரதிவாதி அலுவலகத்தில் வாரிசு சான்றிதழ் நிராகரித்ததற்கான வழங்கிய சான்று இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ஒளிநகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. வாதியின் குடும்ப கொடி வழி ஜாபிதா வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**நீதிமன்ற கேள்வி –**

1. எனது தந்தை 2 மனைவிகள். முதல் மனைவியின் பெயர் ராஜம்மாள். எனது தந்தைக்கும் அவரது முதல்மனைவிக்கும் மொத்தம் 1 மகன், 3 மகள்கள், மகனின் பெயர் வீரபுத்திர கரையாளர், அவர் திருமணமாகாமல் இறந்துவிட்டார். இந்த விவரத்தை நிரூபிக்க நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, 5,7 ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரை பத்தி எண்.2 ல் வீரபுத்திர கரையாளர் திருமணமாகமல் நோய் வாய்ப்பட்டு இறந்துவிட்டார் உண்மை என குறிப்பிடப்பட்டுள்ளது.

2. மேலும் எனது தந்தைக்கு 3 மகள்கள் என்பதை நிரூபிக்க நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, அது ஏற்றுக்கொள்ளப்பட்ட சங்கதிகளாகும். மேலும் எனது தந்தையின் முதல்தாரத்து வாரிசுகளான 3 மகள்களும் இறந்துபோய் விட்டார்கள் என்பதும் 5,7 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையை பார்த்தாலே தெரியும்.

3. மகள் ஸ்ரீரங்கத்தம்மாள், தங்கம்மாள், ஆவுடையம்மாள் ஆகியோர்கள் பெண் வாரிசுகள். ஸ்ரீரங்கத்தம்மாளும் மற்றும் அவரது கணவரும் தற்போது உயிருடன் இல்லை, அவர்களுக்கு ராகிணி என்ற மகள் மட்டும் தான். அவர் தான் இந்த வழக்கின் 8 வது பிரதிவாதி.

4. தங்கம்மாளும் மற்றும் அவரது கணவரும் தற்போது உயிருடன் இல்லை. அவர்களது வாரிசுகள் தான் இந்த வழக்கின் 5,6 பிரதிவாதிகள்.

5. ஆவுடையம்மாளும் மற்றும் அவரது கணவரும் தற்போது உயிருடன் இல்லை, அவர்களின் வாரிசுகள் தான் இந்த வழக்கின் 7,9 மற்றும் 10 பிரதிவாதிகள்.

6. எனது தாயின் பெயர் சடச்சி அம்மாள். எனது தாய்க்கு எனது தந்தையின் திருமணம் மூலம் 2 பிள்ளைகள். நான் மற்றும் 4 ம் பிரதிவாதி வாரிசுகள்.

7. இந்த வழக்கின் நான், 4 முதல் 10 பிரதிவாதிகள் எனது தந்தை கந்தசாமி கரையாளரின் வாரிசுகள் என விளம்புகை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

8. 4 முதல் 10 பிரதிவாதிகளிடம் நான் பேச்சுவார்த்தையில் இல்லை.

9. எனது தாயார் நான் திருப்பூரில் பணியில் இருக்கும்போது 2013, ஜூலை மாதம் 1ம் தேதி இறந்துவிட்டார். எனது தந்தை 07.02.1962ம் ஆண்டு இறந்துவிட்டார்.

10. எனது தந்தைக்கு 2 மனைவிகள் என்பதால் 2ம் பிரதிவாதி என் தந்தைக்கு வாரிசு சான்றிதழ் வழங்க மறுத்துவிட்டார். வா.சா.ஆ.1 ஆவணமான நிராகரிப்பு ஆவணத்தை பரிசீலனை செய்தாலே அதில் வருவாய் ஆய்வாளரும், கிராம நிர்வாக அலுவலரும் ஸ்தல பார்வையின்போது, எனது தந்தையின் முதல் மனைவிக்கு 3 மகள்கள்

இருப்பது தெரியவரும். எனவே தான் அவர்களையும் இந்த வழக்கில் கட்சி சேர்த்துள்ளேன்.

11. எனது பிராது கோரிக்கையில் நான் மற்றும் 4ம் பிரதிவாதி மட்டுமே கந்தசாமி கரையாளரின் வாரிசு என விளம்புகை கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், மேற்கூறிய நபர்களும் வாரிசு என்பதால் அவர்களை பொறுத்தும் விளம்புகை கொடுக்க எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. அதுவே சட்டப்படி நியாயமானதாகும். அதைபோல் பிராது ஆ பரிகாரத்தில் கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் மேற்கூறிய நபர்களும் வாரிசுகள் என 2ம் பிரதிவாதி செயலுறுத்துக்கட்டளை வழங்க எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

12. நான் இந்த வழக்கை தாக்கல் செய்தது வாரிசு சான்றிதழ் கேட்டுதான், வேறு எந்த பரிகாரமும் கோரவில்லை. எனக்கு ஒரு அங்கீகாரம் வேண்டும் என்பதற்காகவே தாக்கல் செய்துள்ளேன்.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய முதல் விசாரணையின் தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Sd/-K.N.Guru
District Munsif, Shenkottai